(ஆ) இதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.503 இலட்சங்களாகும்.

திரு. கே. கல்லன்: தலைவர் அவர்களே, குந்தா ஐந்தாவது மின் நிலையம் பயன் உள்ளதாக இருக்கவேண்டுமானால், ஏற்கனவே, அந்த நீர்த்தேக்கத்திற்கு வரும் ஊற்றுகள் சரியாக இருக்க வேண்டும். அவைகள் சரியாகப் பராமரிக்கப்படாமல் இருக்கின்றன அதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊற்றுகள் பராமரிக்கப்படுவது பற்றிய விவரங்கள் என்னிடத்தில் இல்லை. ஆனால் அங்கே கூடுதலாக 20 மெகாவாட் திறன் கொண்ட மின் நிலையம் அமைப்பதற்கான ஆரம்ப வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(முற்பகல் 9.10)

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, பூமிக்கடியில் இருக்கிற நீரைக் கொண்டுவர முயற்சி செய்து, குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்கு இது சம்பந்தமில்லை.

திரு. மு. அரங்கநாதன்: தலைவரவர்களே, கோத்தகிரி, ஆவக்கல், கிளப்பி, முள்ளூர் கீழ்த்தட்டப் பள்ளம் முதலிய ஐந்து ஆறுகள் ஒன்று சேருகின்ற சோழிகரையில் ஒரு மின்சார நிலையம் அமைக்க அரசு முயற்சி செய்யுமா? அதற்கான ஆய்வு நடத்தப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, தனிக் கேள்வி போடவும்.

திரு. கே. உச்சி: தலைவரவர்களே, இந்தத் திட்டமானது செயல்பட்ட பிறகு எத்தனை பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்? எவ்வளவு மெகாவாட் மின்சாரம் கிடைக்கும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, திட்டம் செயல்பட்டால் மின் உற்பத்தித்தான் கிடைக்கும். வேலை வாய்ப்பு அதிகம் கிடைக்காது.

சென்னை மாநகரிலுள்ள பால் விற்பனை நிலையங்களுக்கு பால் விநியோகம் செய்யும் லாரிகள்

*வினா எண் 3—திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகரில் பால்வள டிப்போக்களுக்கு பால் விநியோகம் செய்வதற்காக, தனியார் லாரிகளை அரசு வாடகைக்கு எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அப்படி வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ள தனியார் லாரிகளின் எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் 27 லாரி ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 60 லாரிகளை சென்னை நகரில் பால் விற்பனை நிலையங்களுக்கு பால் விநியோகம் செய்வதற்காக வாடகைக்கு அமர்த்தியுள்ளது.

டாக்டர் கே. சமரசம்: தலைவரவர்களே, இந்த பால்வள நிறுவனம் பால் விநியோகம் செய்ய தனியார்களிடம் லாரிகளை வாடகைக்கு எடுத்துக் கொள்வதை நிறுத்தி, பால்வள நிறுவனமே சொந்தமாக லாரிகளை வாங்கி பயன்படுத்த முயற்சி செய்யுமா? அப்படிச் செய்தால் இப்போது ஏற்படுகின்ற குறைபாடுகள் நீங்க வழி பிறக்கும் அல்லவா? அதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே, பால்வள நிறுவனமே இந்த லாரிகளை ஏற்றுக்கொள்வது என்பது அனுபவ ரீதியில் இலாபகரமாக இல்லை. ஆனால் இப்போது தனியார் லாரிகளைப் பயன்படுத்துவதினால் ஏதாவது குறைபாடுகள் ஏற்படுமானால் அதைத் தவிர்க்க தக்க நடவடிக்கை எடுக்க இணையம் ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது.

திரு. தி. கா. நல்லப்பன்: தலைவரவர்களே, 27 லாரி ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 60 லாரிகளை வாடகைக்கு எடுத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த லாரிகளை வாடகைக்கு எடுக்க காரணம் என்ன? இந்த நிறுவனத்திடம் லாரிகள் இல்லாத காரணத்தால் வாடகைக்கு எடுத்தார்களா? இல்லை என்றால் வேறு ஏதாவது காரணத்திற்காக வாடகைக்கு எடுத்தார்களா? சொந்த லாரிகள் வாங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே, பால்வள நிறுவனத்திற்கு பால் விநியோகம் செய்ய லாரிகள் இல்லை. அதனால் தனியாரிடம் கொடுத்து, அதைச் சீராக நிர்வாகம் செய்ய முடிவெடுக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 4— திரு. இரா. தாமரைக்கனி: மற்றும் திரு. செ. செம்மலை: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—